# பொதுக்காலத்தின் 18 ஆம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு C

**இன்றைய வாசகங்கள்:**

முதல் வாசகம்: சபை உரையாளர் நூலிலிருந்து வாசகம். 1:2, 2:21-23,

திருப்பாடல்கள் 903-6,12-14,17,

திருத்தூதர் பவுல் கொலோசையருக்கு எழுதிய

திருமுகத்திலிருந்து வாசகம் 3: 1-5,9-11,

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 12:13-21

## திருப்பலி முன்னுரை:

காலைதோறும் உமது பேரன்பால் எங்களுக்கு நிறைவளியும். அப்பொழுது வாழ்நாளெல்லாம் நாங்கள் களிகூர்ந்து மகிழ்வோம். எம் கடவுளாம் தலைவரின் இன்னருள் எம்மீது தங்குவதாக! நாங்கள் செய்பவற்றில் எங்களுக்கு வெற்றி தாரும்.

அன்புமிக்க சகோதர சகோதரிகளே! தலைமுறைதோறும் நமது புகலிடமாய் இருக்கின்ற நம் இறைவனின் திருப்பெயரால் நல்வாழ்த்துக்கள் கூறி இத் திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு உங்களை அன்போடு வரவேற்கின்றோம். இன்று நாம் திருவழிபாட்டு ஆண்டின் பொதுக்காலம் பதினெட்டாம் ஞாயிறு தினத் திருப்பலியைக் கொண்டாடுகின்றோம்.

விண்ணுக்குரியவர்களே, உலக செல்வங்களில் பற்று வைக்காமல் கடவுளுக்கு விருப்பமான வழியில் வாழ இன்றைய திருவழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது. கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் உலகிற்குரிய அனைத்தையும் விட்டுவிட்டு, இயேசுவைப் பின்பற்ற அழைக்கப்படுகிறார். நாம் கோடிகோடியாய் சொத்து சேர்த்தாலும், அதை இந்த உலகத்திலேயே விட்டுச் செல்ல வேண்டும் என்பதை இயேசு நமக்கு நினைவூட்டுகிறார். நமது உயிர் பிரிந்த பிறகு, நாம் சேர்த்து வைத்த சொத்துக்கள் யாருக்கு உரிமையாகும் என சிந்திக்க இயேசு நம்மை அழைக்கிறார். உலகப் பொருட்கள் மீது ஆர்வம் காட்டாமல், விண்ணக வாழ்வுக்கு உரியவற்றை சேர்த்துவைக்க வரம் வேண்டி, இத்திருப்பலியில் பங்கேற்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**வேண்டலை கேட்பவராம் இறைவா,**

எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரும், உமது சாயலுக்கேற்பத் தங்களைப் புதுப்பித்துக்கொண்டு. இவ்வுலகு சார்ந்தவை பற்றி அல்ல, மேலுலகு சார்ந்தவை பற்றிய ஆர்வமுடையவர்களாகவும், அதன்மூலம் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கிடும் மனப் பக்குவத்தை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**தலைமுறைதோறும் எமது புகலிடமாய் இருக்கின்ற தந்தையே இறைவா!**

நாம் உலகப்போக்கிலான பரத்தைமை, ஒழுக்கக்கேடு, கட்டுக்கடங்காத பாலுணர்வு, தீய நாட்டம், சிலைவழிபாடான பேராசை ஆகியவற்றை ஒழித்துவிட்டு.பொய்யை விலக்கி, பழைய மனித இயல்பையும் அதற்குரிய செயல்களையும் களைந்துவிட்டு, புதிய மனித இயல்பை அணிந்து புது வாழ்வு வாழ உதவிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**வாழ்வு தருபவரே இறைவா,**

பதவிக்காகவும், புகழுக்காகவும், சொத்துகளுக்காகவும் பிறரை துன்பத்தில் ஆழ்த்தும் தன்னலவாதிகள் அனைவரையும் மனந்திருப்பி, உலகெங்கும் வாழும் மக்கள் அமைதி யான வாழ்வை சுவைக்க வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**அமைதி அளிப்பவராம் இறைவா,**

எம் இளையோர் இளமையில் உம்மை அதிகமாகத் தேடவும் இறையரசின் மதிப்பீடுகளைத் தனதாக்கி, தங்கள் வாழ்வால், கிறிஸ்துவுக்கும் சமூகத்திற்கும் சான்றுப் பகர்ந்திடத் தேவையான அருளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**அமைதி அருள்பவரே இறைவா,**

உலகு சார்ந்த பாரம்பரியங்கள் மற்றும் மூடநம்பிக்கைகளில் சிக்கித் தவிக்கும் எம் நாட்டு மக்கள் அனைவரும், உம்மைப் பற்றிய உண்மைகளை உணர்ந்து நீர் தரும் அமை தியை பெற்றுக்கொள்ள வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**குடும்பங்களின் பாதுகாவலான எம் இறைவா!**

எம் குடும்பங்களில் உள்ள எம் பெற்றோர், பெரியோர், நண்பர்கள், உறவினர்கள் அனைவரும் சமாதானத்தோடும், ஒற்றுமையோடும் பிரிவினைகள் கருத்துவேறுபாடுகள் இல்லாமல் வாழத் தேவையான அருளைப் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**திட்டமிட்டு செயல்படுத்துபவராம் இறைவா,**

எவ்வகைப் பேராசைக்கும் இடங்கொடாத மனதை எனக்குத் தந்தருளும். நீர் எனக்குத் தந்திருக்கிற கொடைகள், நன்மைகள், செல்வங்களை எண்ணிப்பார்த்து, நன்றி சொல்கிற, மகிழ்ச்சி அடைகிற மனநிலையை எனக்குத் தாரும். நீர் தரும் ஆறுதலும், உம்மோடு உமக்காக செலவழிக்கும் நேரமும் எவ்வளவோ மேலானவை என்பதை நான் உணரச் செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

www.tamilcatholicnews.com